**தலைப்பு 108 – தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 108 – தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 11 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

## 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### (அ) மொத்த நிதி ஏற்பாடு மற்றும் செலவினம்

அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 543.73 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 380.16 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 163.57 மில்லியன் தொகை அதாவது 30.08 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 128.43 | 122.64 | 5.79 | 4.5 |
| மூலதனம் | 415.30 | 257.52 | 157.78 | 37.99 |
| மொத்தம் | **543.73** | **380.16** | **163.57** | **30.08** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 10801 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 6.00 | 5.20 | 2.00 | 2.68 | 26.00 | 11.39 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான 7002/0000/00/0349/0016/000 ஆம் கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 18.35 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சின் பொது வைப்புக் கணக்குகள் 02 இன் 2016 திசெம்பர் 31 இல் வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12.54 மில்லியன் ஆக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
| --- | --- |
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0016/0079/000 | 12.31 |
| 6000/0000/00/0018/0016/000 | 0.23 |
| மொத்தம் | 12.54 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படுதல்

1978 திசெம்பர் 19 ஆம் திகதியில் 842 உள்ள பொருளாளர் சுற்றறிக்கையின் படி நிலையான சொத்துக்கள் பதிவேடுகள் நாளதுவரையாகுதலாக பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்

(அ) செலவு விடயங்களுக்காக திட்டமிடப்பட்டிருந்த ரூபா 43 மில்லியன் முழு நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. கொள்வனவு நடவடிக்கைகள் வருடத்தின் இறுதியில் இடம் பெறுவதனால் வருட இறுதிக்கு முன்னர் கொள்வனவு செய்வதற்கு இருந்த வாகனம் இறக்குமதி செய்வதற்கு முடியாமல் போனது சேமிப்புக்கு காரணமாக இருந்தது.

(ஆ) மிகை நிதி ஏற்பாடு திட்டமிடப்பட்டிருந்ததன் காரணமாக மற்றும் வருடத்திற்குள் முடிவடைந்திருக்க வேண்டிய காரியங்கள் முறையாக இடம் பெறாததன் காரணமாக செலவு விடயங்கள் 10 க்கான நிதி ஏற்பாடுகள் உபயோகிக்கப்பட்டதன் பின்னர் சேமிப்பு ரூபா 95,260,766 ஆக இருந்தது. இது தேறிய நிதி ஏற்பாட்டின் 07 சதவீதத்திலிருந்து 95 சதவீதம் வரையான வீச்சிலான அளவினை கொண்டிருந்தது.

#### 3.2.2 கட்டாய சேமிப்பு

(அ) 2015 திசெம்பர் 29 ஆம் திகதி 07/2015 இலக்கத்தை உடைய செலவு செய்வதற்கான அதிகாரத்தை வழங்கல் 2016 பாதீடு மற்றும் அரச செலவு முகாமைத்துவம் சம்பந்தமான சுற்றுநிருபத்தின் பந்தி (2) இன் பிரகாரம் எரிபொருள் நிதி ஏற்பாடுகளில்

15 சதவீத்தை அதாவது ரூபா 1,479,000 ஐ கட்டாய சேமிப்பாக்க வேண்டியிருந்தும், அப்படி செய்யாமல் வேறு செலவு விடயங்களில் சேமிப்பு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மேலுள்ள சுற்றுநிருபத்தின் பிரகாரம் போக்குவரத்து செலவுக்கான நிதி ஏற்பாடுகளில் 10 சதவீதத்தை அதாவது ரூபா 400,000 ஐ கட்டாய சேமிப்பாக இருக்க வேண்டிய நிலையில் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் BD/RDS/108/1/2/1 இலக்கத்ததை உடைய 2016 ஜுலை 25 ஆம் திகதியின் கடிதத்தின் அடிப்படையில் போக்குவரத்துச் செலவு விடயங்களில் மீதப்படித்தியிருக்கவேண்டிய அளவு வேறு செலவு விடயங்களில் மீதப்படுத்துவதற்கு அதிகாரத்தை வழங்கியிருந்தது.

**3.3 கட்டுநிதிக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ள ரூபா 17,885,954.74 பண மீதி பொருளாளருக்கு அனுப்பப்பட்டிருப்பினும், அந்த மீதி கட்டுநிதிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின்போது வழங்கப்பட்டிருந்த ரூபா 460,000 முற்பணம் 2016 திசெம்பர் 31 ஆகும் போதும் மீளச்செலுத்தாதிருந்ததுடன் ரூபா 450,000 2017 மே 09 ஆம் திகதியிலும் மீளச்செலுத்தப்படாமலிருந்தது.

**3.4 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

**3.4.1 சேமிப்புக்களை விஞ்சி பொறுப்புகளுக்கு உட்பட்டிருத்தல்**

நிதிப்பிரமாணம் 94(1) பிரகாரம் நிதி ஏற்பாடுகளை விஞ்சி பொறுப்புகளுக்கு உட்படக்கூடாது இருப்பினும் செலவு விடயங்கள் 11 க்கு உரித்தான நிதி ஏற்பாடுகளை விஞ்சி ரூபா 1,458,077 க்கு பொறுப்புக்களுக்கு உட்பட்டிருந்த சந்தர்ப்பமாக இருந்தது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.
வேறு நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்

இந்த அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற நிதி அமைச்சிக்குரிய வாகனமொன்று விபத்திற்குட்பட்டு வழக்குப் பொருளொன்றாக கல்கிஸ்ஸ நீதிமன்ற வளாகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அவ் வாகனத்தை பொறுப்பேற்கவோ அல்லது எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பதற்கோ முடியாதிருந்ததாக அமைச்சின் செயலாளரினால் 2016 ஜுலை 26 ஆந் திகதி எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**3.6 இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 104(3) | நட்ட இழப்பு சம்பந்தமான பரிபூரணமான அறிக்கையொன்று சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களுக்கு அதிகமான தாமதமொன்று நிகழ்ந்ததாக கருதப்படுமேயானால் ஆரம்ப அறிக்கை ஒழுங்குப்படுத்தப்பட வேண்டியிருந்தும் இரண்டு சந்தர்ப்பங்களில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 104(4) | நட்ட இழப்பொன்று நிகழ்ந்து 03 மாதத்திற்குள் பூரணமான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் 13 காணப்பட்டன. |

**3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

அரச கொள்வனவு வழிகாட்டிக்கோவை செயற்பாடுகளிலிருந்து விலகுதல்

(அ) முஸ்லிம் கலாசார மத்திய நிலையத்தை கட்டுதல்

முஸ்லிம் சமய மற்றும் கலாசார திணைக்களத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வக்ப் சபை, வக்ப் நீதிமன்றம், ஆராய்ச்சி மத்திய நிலையம் மற்றும் முஸ்லிம் சமய மற்றும் கலாசார திணைக்களத்தின் பிரதான காரியாலயம் மற்றும் நூல் நிலையம் ஒரே கட்டிடத்தில் இஸ்தாபிப்பதற்காக 1995 ஜனவரி 02 ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றிருந்தது. இது சம்பந்தமாக கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்தக் கட்டிடம் ரூபா 286.9 மில்லியனுக்கு கட்டப்படுவதற்கு மற்றும் பொறியியல் கூட்டுத்தாபனத்தின் உபதேசத்தின் கீழ் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் (CECB) ஊடாக நிர்மானிப்பதற்கு 2006 மே 24 ஆம் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. இந்த அனுமதியிலிருந்து இதுவரை 10 வருடங்களுக்கு அதிகமான காலம் கடந்திருந்தாலும் கட்டிடத்தை முழுமையாக முடிக்க முடியாதிருந்தது.

இதனால் விபரமான திட்டம் மற்றும் பிரமாணப் பத்திரம் தயாரித்து முடிக்காமை, திட்டத்தை மாற்றுதல், காலநிலை மாற்றங்கள் நிதி விடுகையை மட்டுப்படுத்தல் இடம் பெறல் போன்ற விடயங்கள் தாக்கம் செலுத்தியிருந்தன.

(ii) இங்கு கட்டிடம் கீழ்மாடி மற்றும் 09 மாடிகளில் முடிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. 2008 ஆம் வருடத்திலே முழு செலவு மதிப்பீடு ரூபா 596 மில்லியன் வரை திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தும், இதற்காக நிரந்தர தொழில்நுட்ப மதீப்பீட்டுக் குழுவின் அங்கீகாரமும் மற்றும் அமைச்சரவையின்

அனுமதியும் பெற்றிருக்காதிருந்ததுடன் 2008 ஜுலை 09 ஆம் திகதி அமைச்சரவையின் தீர்மானத்தின் படி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரத்திற்கு அனுகூலமாக செலவு மதிப்பீட்டுத் திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(iii) அப்படியிருக்கும்போது ரூபா 938 மில்லியன் திருத்தப்பட்ட மதிப்பீடொன்று 2015 ஒக்டோபர் 21 ஆம் திகதி அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இதற்காக 2015 நவம்பர் 18 ஆம் திகதி அமைச்சரவையின் தீர்மானமாக இருந்தது. 2008 வருடத்திலே தீர்மானிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 596 மில்லியனுக்கு உட்பட்டு இந்த செயற்திட்டம் 2016 திசெம்பருக்குள் முடிக்கப்படவேண்டுமென்று இருப்பினும் 2008 ஆம் வருடத்திலே இந்த செயற்திட்டம் ரூபா 596 மில்லியனுக்கு மேற்கொள்வதற்கு அமைச்சரவை தீர்மானம் எடுத்திருக்கவில்லை.

(iv) ரூபா 596 மில்லியன் மதிப்பீட்டிற்கு முழு கட்டிடத்தையும் கட்டி முடிப்பதற்கு முடியாமைக்கான காரணம் காட்டி அந்த நிதிக்கு கீழ்மாடி உட்பட 04 மாடிகள் மட்டும் முடிக்கப்பட்டு வெளிவேலையை முழுமையாக முடிப்பதற்கு மீண்டும் 2016 மார்ச் 16 ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டிருந்தது. இதன்போது நிர்மானித்தல் கட்டம் I,II மற்றும் III என்று 03 கட்டங்களின் கீழ் நடத்தப்பட்டு 10 மாடிகள் வரை கொங்ரீட் வேலை முடிக்கப்பட்டிருந்தபோதும் அங்கு 06 மாடிகளின் வேலைகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2006 ஆம் வருடத்திலே திட்டமிட்டப்படி கட்டிடம் நிர்மானித்தல் நடைப்பெற்றிருந்தால் ரூபா 286.9 மில்லியன் நிதியில் முடித்திருக்க முடியுமாயிருந்திருக்கும். 2016 ஆம் வருடமாகும்போது முழுச் செலவு ரூபா 938 மில்லியன் ஆக கணக்கிடப்பட்டிருந்ததுடன் அது நூற்றுக்கு 228 சதவீத அதிகரிப்பாகும்.

(vi) கொழும்பு நகரத்திலே பொருளியல் பெறுமதி மிகவும் உயர்ந்த நிலப்பிரதேசத்தில் இஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்த கட்டிடம் எஞ்சியுள்ள 06 மாடிகளினதும் நிர்மானப் பணிகள் முடிக்கப்பட்டு பொருளாதாரத்திற்கு பிரயோசனமானதாக மற்றும் பலனளிக்கக்கூடியதாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(vii) 2017 ஜுன் 14 ஆம் திகதியாகும்போது திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட படிவத்தின்படி கட்டம் I பய்லிங் இற்காக ரூபா 45,323,071 வும் மற்றும் கட்டம் II கொங்க்ரீட் கட்டமைப்புக்காக ரூபா 183,832,430 வும் மற்றும் கட்டம் III இற்காக ரூபா 82,994,471 வுமாக வழங்கியிருந்த மொத்தப் பணம் ரூபா 312,149,973 ஆகும்.

(viii) III கட்டம்

-----------------

- III கட்டத்திற்காக ஒப்பந்தமொன்றுக்கு முன்வந்திராதிருந்ததுடன் செயலாற்றல் பிணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கக்கூடும் என்றும் அவதானிக்க முடியவில்லை.

- ஆலோசணை நிறுவனமொன்றின் மூலமாக பிரமாணப் பத்திரம் 2016 ஜுலை 21 ஆம் திகதி வரைக்கும் சமர்ப்பிக்கப்படாமலிருந்ததுடன் அது தாமதமாகி 2016 ஜுலை 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

- அந்த பிரமாண பத்திரத்திற்காக வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் நிரந்தர விலைக்குழுவின் அனுமதி 2017 ஜுலை 19 ஆம் திகதிக்கும் பெற்றிருக்கவில்லை.

- III கட்டத்திற்கான வேலைகள் தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் சம்பந்தமாக அமைச்சினால் கட்டிடத்தின் எஞ்சியுள்ள வேலைகள் சம்பந்தமாக நிதி ஏற்பாடுகளை பெற்றுக்கொள்ளும்போது இதுவரை செலுத்தப்பட்டுள்ள முழு பெறுமதி ரூபா 300.5 மில்லியன் ஆகவும் இன்னும் நிதி ஏற்பாட்டின் அவசியம் ரூபா 295.5 மில்லியன் என்றும் காண்பித்து 2016 வருடத்திற்காக ரூபா 295.5 மில்லியன் நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அப்படியிருக்கும்போது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவலகள் திணைக்களத்தின் தகவலின் படி இதுவரை செலுத்தப்பட்டிருந்த பெறுமதி ரூபா 312 மில்லியன் ஆகவும் ரூபா 11 மில்லியன் நிதி ஏற்பாட்டில் மேலதிகமாக பெறப்பட்டு அதிலிருந்து ரூபா 203,103,599 மீளாய்வாண்டிலே செலுத்தப்பட்டிருந்தது.

- கட்டிடத்தை இஸ்தாபிக்கும்போது திட்டமிடப்படாத 02 பிரிவு மற்றும் 03 அறைகள் வேலை முடிக்கப்பட்டுள்ள நான்கு மாடிக்குள் இஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கெப்பட்டிபொல மாவத்தை C-12 இடத்தில் அமைந்துள்ள அமைச்சரின் உத்தியோகபூர்வ வாஸஸ்தளத்தை நவீன மயப்படுத்தல்

---

இது சம்பந்தமாக கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இந்தக் கொள்வனவுகள் 2016 ஆம் வருடத்தின் செயலாற்றல் அறிக்கையில் மற்றும் கொள்வனவு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதற்காக பரிபூரணமான திட்டங்கள் இரண்டின் மூலம் ரூபா 9,277,808 நிதி ஏற்பாடு பெறப்பட்டிருந்தது.

(ii) உத்தியோகபூர்வ வாஸஸ்தளத்தை நவீனமயப்படுத்துவதற்காக 2016 மார்ச் 30 ஆம் திகதி ரூபா 8,851,029 கட்டிட திணைக்களத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தது. பொறுப்பளித்தலுக்கான கொள்வனவுக் குழுவின் தீர்மானம் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) புனர்நிர்மாணம் செய்யப்படவேண்டிய பகுதி மற்றும் மதிப்பீடு அடிக்கடி பெறப்படும் யோசனைக்கு அமைய மாற்றங்கள் செய்தல் மற்றும் மதிப்பிட்டதற்கு புறம்பாக மற்றும் மதிப்பிடப்பட்ட வேலைகளின் பகுதி செய்து முடிக்காமை போன்றன இடம்பெற்றுள்ளது.

(iv) 2016 மே 28 ஆம் திகதி மேலதிக வேலைகளுக்காக ரூபா 3,459,414 மதிப்பீடொன்று வழங்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக 2016 நவம்பர் 24 ஆம் திகதி வழங்கிய மதிப்பீட்டில் ரூபா 1,164,135 பெறுமதியான வேலைகள் குறைக்கப்பட்டிருந்தது. மீண்டும் 2017 பெப்ரவரி 22 ஆம் திகதி மேலதிக வேலைக்காக இன்னும் ரூபா 1,690,179 மதிப்பீடொன்று வழங்கப்பட்டிருந்தது.

அதோடு 255 அடி பரப்பளவுக்கு Gypsum board பொருத்துவதற்கு ரூபா 138,150 செலவு செய்யப்பட்டிருந்தது. இப்படி பொருத்தப்பட்டிருந்த Gypsum board ஐ அகற்றி மீண்டும் முன்பிருந்த Arch பொருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இன்னும் நவீனமயப்படுத்தலுக்கு முன் வாஸஸ்தளத்தில் காணப்பட்ட டயில் பழையது அல்ல என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

(v) முடிவடைந்த வேலைக்கு நிதி செலுத்தும்போது சுதந்திரமான தகைமைகளுள்ள நபர்களின் அங்கீகாரத்துடன் இடம்பெற்றிருந்தாலும் அந்த காரியங்கள் கட்டிட திணைக்களத்தினால் இடம்பெற்றிருந்தது.

(vi) 2016 ஏப்ரல் 06 ஆம் திகதி உத்தியோகப்பூர்வ வாஸஸ்தளத்தின் புனர்நிர்மானப் பணிகளை துரிதப்படுத்துமுகமாக மேற்பார்வை மற்றும் பின் விபரமளித்தலுக்காக அமைச்சின் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது. அந்த குழுவினுள் தகைமைகளுள்ள நபர்கள் காணப்பட்ட போதும் முடிவடைந்த வேலைக்கான பணம் செலுத்துவதற்கான அங்கீகாரமளித்தல் மறுக்கப்பட்டிருந்தது.

**(இ) பிரதி அமைச்சருக்காக புதிய வாகனமொன்றை கொள்வனவு செய்தல்**

இது சம்பந்தமாக கீழ் வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதி மற்றும் 2016 ஆகஸ்ட் 05 ம் திகதி பிரதி அமைச்சருக்கு அவசியமான வாகனத்தின் விவரவரையறை, வகை மற்றும் மாதிரி என்னவென்பது அறிவிக்கப்பட்டிருந்ததுடன் இந்த வாகனத்தை கொள்வனவு செய்வதற்காக மட்டுப்படுத்தப்பட்ட கூறு விலை 2016 செப்தெம்பர் 09 ம் திகதி 06 நிறுவனங்களிடமிருந்து கூறுவிலை கோரப்பட்டிருந்தது. அதில் 03 நிறுவனங்கள் மாத்திரம் மேற்கோள் சமர்ப்பித்திருந்தது.

(ii) 2016 ஒக்டோபர் 07 ஆம் திகதியில் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அறிக்கையின் படி ஆரம்ப மதிப்பீட்டின்போது 02 நிறுவனங்கள் மற்றும் வேறு நிறுவனங்கள் இரண்டாவது கட்டத்தின்போது மறுக்கப்பட்டு மீண்டும் கொள்வனவு பெறுகைகள் இடம்பெற வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அப்படியிருக்கும்போது 2016 ஒக்டோபர் 10 ஆம் திகதி பிரதான கணக்காளரினால் மீண்டும் விலை மனுக்கோரல் பிரயோசனமளிக்காது எனக் கூறி ஆரம்ப மதிப்பீட்டின் போது மறுக்கப்பட்டிருந்த இரண்டு நிறுவனங்களிலிருந்து அவற்றின் விவரவரையறை பரீட்சித்து அங்கீகாரம் பெற்றுத்தருமாறு மதிப்பீட்டு குழுவின் தலைவருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது.

இதன்போது கொள்வனவு பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 2.5 வழிகாட்டலின் பிரகாரம் கொள்வனவுக் குழுவுக்குள்ள அதிகாரத்தின்படி அந்த விலை மனு மீண்டும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு கொள்வனவு சபை தீர்மானித்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தாலும் அவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அதனால் மீண்டும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு 2016 ஒக்டோபர் 14 ம் திகதி ஒன்றுகூடி அந்த இரண்டு நிறுவனங்களினதும் விவரவரையறை சம்பந்தமாக அவதானிப்புக்களை மேற்கொண்டிருந்தது. அந்த தீர்மானத்தின்படி பிரதி அமைச்சரின் அவசியத்திற்கு பொருத்தமான வாகனம் ஆரம்ப மதிப்பீட்டின்

போது மறுக்கப்பட்டிருந்த ஒரு நிறுவனத்திலிருந்து வாகனம் ரூபா 42,655,000 வுக்கு வாங்குவதற்கு கொள்வனவுக் குழு நடவடிக்கை எடுத்திருந்தது.

## 3.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 14 | 14 | - |
| மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| இரண்டாம் நிலை | 61 | 41 | 20 |
| ஆரம்ப நிலை | 31 | 28 | 03 |
| ஏனையவை (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 04 | 03 | 01 |
| மொத்தம் | 114 | 88 | 26 |

மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய 26 வெற்றிடங்களுக்கும் ஆட்சேர்போ அல்லது திருத்தங்களோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.